
www.padippakam.com

# தாகம்

○ ஆசிரியர்: வி. மைக்கல் கொலின்

Thaaham An Art Literary Tamil Magazine May 1994

21



அவனின்
நெற்றிப் பொட்டில்
அந்த துப்பாக்கி
அழுத்தப்பட
ஆயத்தமாக இருந்தது.
,,என்ன எழுதினாய்
எதற்காக எழுதினாய்...?''
கேள்விகள்......
கேள்விகள்......
''உண்மையை எழுதினேன்
என் மக்களுக்காய்
எழுதினேன்
பதில்கள்......
பதில்கள்.....
''டுமீல்...''
''இவனைத் தூக்கிச்
செல்லுங்கள்'

-மைதிலி

விலை. 20-00

படிப்பகம்

www.padippakam.com

மங்கையர் மனங்கவரும் அழகிய 22 கரட் தங்க வைர
நகைகளுக்கு திருமலையில் நாட வேண்டிய
சிறந்த நகைமாளிகை

அச்சுதா ஜுவலர்ஸ்

40, 3ம் குறுக்குத் தெரு,
திருக்கோணமலை.

Branch.

NEW
ACHCHUTHA JEWELLERS

Makers of Genuine 22 ct Gold Jewellers

29, CASH STREET, TRINCOMALEE.

*With Best Compliments From*

சாலிங்கா ஏஜென்சி தபால் நிலையம்
281, நீதிமன்ற வீதி,
திருக்கோணமலை.

உள்நாட்டு வெளிநாட்டு பார்சல்கள், தொலைபேசி வசதிகள்
Fax வசதிகள், மற்றும் உங்களுக்கு தேவையான,
முத்திரைகள், கவர்கள் என்பவற்றை எந்நேரமும்
நீங்கள் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய
சிறந்த ஸ்தாபனம்

சாலிங்கா ஏஜென்சி தபால் நிலையம்

கிளை: 3-6, உட்துறைமுக வீதி,
உவர்மலை சந்தி,
திருக்கோணமலை.

22417, 22479

Fax: 22352

படிப்பகம்

www.padippakam.com


*Best With Wishes*

For:

**MODERN**
&
**DISTINCTIVE**
**JEWELLERY**



# R. B. Jewellers.

**GOLD & JEWEL MERCHANTS**

***162 Ahambaram Road,***
***Trincomalee.***

Phone. 026-2247



*Best With Wishes*

# குகன்ஸ்



**கட்டிடப் பொருட்கள் டிப்போ**
**360, நீதிமன்ற வீதி,**
**திருக்கோணமலை.**

எம்மிடம்

- ★ வேண்டிய அளவுகளில் பிளைவூட் கதவுகள்
- ★ நிலை யன்னல்கள், கதவுகள்
- ★ தளபாடங்கள்

செய்து கொடுக்கப்படும்.

உங்களுக்குத் தேவையான அளவுகளில் கம்பஸ் (Kempus) மரம் மொத்தமாகவோ, சில்லறையாகவோ பெற்றுக்கொள்ளலாம் மற்றும் சகலவிதமான கட்டிடப்பொருட்களும், ஆடருக்கு உங்கள் வீட்டிற்கு கொண்டு வந்து விநியோகிக்கப்படும்.

www.padippakam.com


வவுனியா அரிசி, சுத்தமான நல்லெண்ணெய், மற்றும் தானிய வகைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

சாயி டிரேட் சென்ரர்

105, வித்தியாலயம் வீதி,
திருக்கோணமலை.

உங்களுக்குத் தேவையான சகல விதமான அலுவலக, பாடசாலை உபகரணங்களுக்கும், பிரபல எழுத்தாளர்களின் நாவல்களுக்கும் நாட வேண்டிய புத்தக நிலையம்,

மயூரன்ஸ் புக் சென்ரர்

101, வித்தியாலயம் வீதி,
திருக்கோணமலை.

திருமலை வீடியோ ரசிகர்களின்

உள்ளங்களில் நிறைந்த வீடியோ எஸ். வி. எஸ் ஸ்தாபனத்தாரின்

சித்திரை வருட நல்வாழ்த்துக்கள்

நீங்கள் விரும்பும் தமிழ், ஆங்கில, மலையாள திரைப்படங்களை தரமான பிரதியில் பார்த்து மகிழவும்


வீடியோ படங்கள், பாடல்களை சிறந்த முறையில் பதிவு செய்யவும்

நாடவேண்டிய இடம்

VIDEO S. V. S
109 ARUNAGIRI ROAD,
TRINCOMALEE.

வீடியோ எஸ். வி. எஸ்
இல. 109, அருணகிரி வீதி,
திருக்கோணமலை.

www.padippakam.com



# தாகம்

(கலை இலக்கிய புரட்சிகர முற்போக்கு இதழ்)

## 9வது ஆண்டு மலர்

மீண்டும் உங்களுடன்...

தாகம் கலை இலக்கிய புரட்சிகர முற்போக்கு இதழின் 9வது ஆண்டு மலரில் சந்திக்கின்றோம். கடந்த காலங்களில் தாகத்தின் தொடர்ந்தேர்ச்சியான வருகைக்கும் அதன் நிலையான இருப்புக்கும் எம்மால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் சில தவிர்க்க முடியாத காரணங்களினால் அதன் இலக்கை அடைய முடியாததினால் தாகத்தின் வருகை தாமதப்பட்டு போனதேயொழிய அதன் இருப்பை நாம் இவ்விதழின் மூலம் மீண்டும் உறுதி செய்துள்ளோம்.

இலங்கையின் இன்றைய அரசியல் பொருளாதாரச் சூழலின் மத்தியில் மலினப்படுத்தப்பட்ட வாசகர் குழாமின் மத்தியில் தாகம் புதிய சிந்தனைகளுடன் தொடர்ச்சியாக வெளிவரும் என்பதை உறுதி கூறினும் கால அளவுகள் கவனத்தில் கொள்ளப்படாது. தாகத்தின் இதழ் வரிசையே கவனத்தில் கொள்ளப்படும்.

உலக அரங்கிலே இன்றைய அரசியல் நிகழ்வுகள், மாற்றங்கள், கவனிக்கத்தக்கவையாக உள்ளன. அந்த வகையில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பலஸ்தீன - இஸ்ரவேல் ஒப்பந்தம், தென்னாபிரிக்க கறுப்பின மக்களுக்கான வாக்குரிமை, என்பன கவனத்தில் கொள்ளப்படத்தக்கன.

உங்கள் சுயத்துவமான படைப்புக்களையும் ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் கருத்துக்களையும் அனுப்புவதற்கு,

தாகம்- வி. மைக்கல்கொலின்
(ஆசிரியர் - தாகம்)
156, கிறீன் வீதி,
திருக்கோணமலை.
இலங்கை.

நன்றி : மௌனம்
யுனெஸ்கோ கூரியர்
இனி.
Artist Vladimir Naumov
(Film Director)
Soviet Film Gallery

MR. MICHEL COLLIN
156, GREEN ROAD
TRINCOMALEE
SRI LANKA



படிப்பகம்

www.padippakam.com

கடந்த 40 வருடங்களாக வாக்குரிமையற்று சிறுபான்மை வெள்ளை இனத்தினரால் ஆளப்பட்டு வந்த தென்னாபிரிக்க மக்கள் இன்று தமது மண்ணில் தமக்கான தலைமைகளை தேர்ந்தெடுத்துள்ளார்கள். உழைக்கும் வர்க்கத்தின் பேர் சொல்லும் இந்த வருட மே தினத்தின் உண்மையான கவனிப்பை பெறும் தென்னாபிரிக்க மக்களு-க்கும், அதன் தலைவர் நெல்சன் மண்டேலாவுக்கும் எமது வாழ்த்துக்களை தெரிவி-த்துக் கொள்கின்றோம்.

திருக்கோணமலை –
மீண்டும் களை கட்டத் தொடங்கி விட்டது. அரசியல் கூட்டங்கள், இன்னிசை நிகழ்ச்சி-கள், மேதின ஊர்வலங்கள், இயக்கச் சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள், என மீண்டும் களை கட்டத் தொடங்கி விட்டது.

கூட்டணியினரின் மீள் வருகை, தந்தை செல்வா நினைவு தின பொதுக் கூட்டம், அமைப்பு மீளமைப்பு வேலைகள் என்று ஆரம்பமாகிவிட்டது.

மீண்டும் வாழை மர , தோரணங்கள் கட்டி
கிழமைக்கு ஆளுக்கொரு இயக்கமாக
ஊர்த்தால் வைப்பின் – முழுமையாகவே
திருக்கோணமலை பின்னோக்கி சென்று விடும்.
(ஆண்டை குறிப்பிட தேவையில்லை என்றே நினைக்கின்றேன்.)

இவற்றையெல்லாம் முக்கிய கவனமெடுத்துக் கொள்ளும் அளவுக்கு திருமலை மக்கள் இல்லையெனினும் இவர்களது செயற்பாட்டு வடிவங்கள் அனைத்தும் தமிழ் மக்கள், தமிழ் பேசும் மக்கள், எமது மக்கள், எமது மண், என்று இவர்கள் மீண்டும் மீண்டுமாக பேச முற்படுகையில் தான் –

கண்ணீர் விடத் தோன்றுகிறது.

இவர்களை நம்பிய மக்களுக்காக அல்ல.

இவர்களுக்காகவே !

தொடர்ந்து சந்திப்போம்.

வாழ்த்துக்களுடன்

ஆசிரியர்



படிப்பகம்

www.padippakam.com


# ஜப்பானிய ஹைக்கூ கவிதைகள்

ஆங்கிலம்வழி தமிழில் : தஞ்சாவூர்க் கவிராயர்.

சட்டெனச் சில்லிட்டதென் தேகம்
அறைக்குள் நடந்த
என் பாதத்தின் கீழ்
இறந்த என் மனைவியின் சீப்பு



குட்டித் தூக்கம்
விழித்தேன்
வசந்தம் போய்விட்டது





வெள்ளைத் தாமரை
கருக்கரிவாளை
சட்டென பின்னுக்கிழுத்துக்
கொண்டார் அத்துறவி.

—பூசன்.

மூங்கில் மரக்காட்டில்
தொலைந்த என்வீடு—
நிலவு எழுந்ததும்
வெளிப்பட்டது.





ஈக்கள் மொய்த்தன
இந்தச் சுருக்கம் விழுந்த
கிழட்டுக் கையிடம்
என்ன வேண்டுமாம் அவற்றுக்கு ?






இன்று காலை கேட்ட
குயிலின் பாட்டுக்கூட
மழையில்
நனைந்திருந்தது

—இஸ்ஸா

எரிப்பதற்காகக்
குவித்திருந்த
மரத்துண்டுகள்
மலரத் தொடங்கின.

—பான்ச்சோ





விருந்தினர் போய்விட்டார்
எனக்குள்ளே முணுமுணுத்தபடி.
மார்க்கச்சையை
முடிந்தேன் நான்

—ஷோஜான்

**தாகம்**
(இரு மாத இதழ்)

இலங்கையில்
தனிப்பிரதி: ரூ. 20-00
ஆண்டுக்கு ; ரூ. 100-00
(தபால் செலவு உட்பட)

ஐரோப்பிய நாடுகளுக்கு
தனிப்பிரதி: 3US டொலர்
ஆண்டுக்கு : 15US டொலர்
(தபால் செலவு உட்பட)

W.Michael Colin
156, Green Road
Trincomalee
SRI LANKA



படிப்பகம்

www.padippakam.com

# இலங்கையின் சாலையோர நாடகக் கலை

. ஜே. குணவர்த்தனா

மற்ற பல தெற்கு ஆசிய நாடுகளில் உள்ளதுபோல, ஸ்ரீலங்காவிலும் நகரங்களிலும், கிராமங்களிலும் திறந்தவெளிப் பொழுது போக்குக் கேளிக்கைகள் நடைபெறுகின்றன. அவற்றின் தோற்றம், பாணி, கருத்து ஆகியற்றின் அடிப்படையில் அவற்றை நவீன மற்றும் பாரம்பரியக் கலைகள் எனப் பொதுவாகப் பிரிக்கலாம் எனினும் இவ்விரண்டுக்குமிடையே உள்ள வேறுபாடு மிகவும் தெளிவாக இல்லை.

இரண்டாயிரம் ஆண்டுகளாக, ஸ்ரீலங்காவில் புத்தமதம், அதன் பண்பாட்டை உருவாக்கும் முக்கிய பாதிப்பாக இருந்து வந்திருக்கிறது. மக்கள் தொகையில் 70 சதவீதம் சிங்கள மொழிபேசும் புத்தமதத்தினர். இம்மதத்தின் மரபு, கோட்பாடுகளின் அடிப்படையில் வழிபாட்டு முறைகளை அவர்கள் இன்னமும் பாதுகாத்து வருகிறார்கள். சிறுபான்மையினரான தமிழர்கள் பெரும்பாலும் இந்துக்கள்.

ஸ்ரீலங்காவில், புத்தமதமானாலும் அல்லது இந்துமதமானாலும், மத வழிபாட்டுடன் தொடர்புடைய பொதுநிகழ்ச்சிகளில் ஊர்வலங்கள் மிகவும் முக்கியமானவை. சிங்கள மொழியில் இவற்றை பெரஹெராஸ் என்று அழைப்பர். இவ்வூர்வலங்களில் மிகவும் புகழ்பெற்றது. டலாடா பெரஹெரா. இரவில் நடைபெறும் பெரும் ஊர்வலத்தில் முகப்படாம் பூண்ட யானைகளும்நடனக் கலைஞர்களும் பங்கு பெறுவர். புத்தர் பெருமானின் புனிதப் பற்சின்னத்திற்கு வழிபாடு செலுத்தும் வகையில் கண்டி நகரத் தெருக்களில் இது நடைபெறும். புத்தர் பெருமானுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நடைபெறும் இவ்வூர்வலம் பல்லாயிரக்கணக்கான பக்தர்களையும், சுற்றுலாப் பயணிகளையும் கவர்ந்திழுக்கிறது.

டாலடா ஊர்வலத்தின் அளவு பெரியதாக இல்லாவிட்டாலும், மற்ற புத்தக் கோயில்களிலும் சிறு தெய்வங்களுக்கான கோயில்களிலும் இம்மாதிரி பல ஊர்வலங்கள் நடைபெறுகின்றன. இவை மதத்தொடர்புடையவை என்றாலும், இவற்றில் மதச் சார்பின்மையையும், சற்று தரக்குறைவான அங்கங்களும் சில சமயம் இடம்பெற்றுவிட்டன. பெரஹெராஸ், வழிபாட்டுக்கான பொது நிகழ்ச்சிகள் எனினும், இவை கண்ணுக்கும் செவிக்கும் விருந்தளிக்கின்றன.

. ஜே. குணவர்த்தனா
லங்கை அறிஞர். கெலானி
ா பல்கலைக் கழகத்தில்
ழகியல் ஆய்வுக்கூடத்தின்
யக்குநர் ''நாடகத் திற
ாய்வு'' (நியூயார்க்) என்ற
தழின் ஆசிரியராகப் பணி
ாற்றியவர். இலங்கையில்
கழ்பெற்ற திறனாய்வாளர்;
ரைக் கதாசிரியர்.




ஒரு பெரஹராவில் யானைகளும், நடனக் கலைஞர்களும், பக்தர்களும் (வெள்ளாடை அணிந்த ஆண், பெண், குழந்தைகள்) உள்ளனர். இவர்களைத் தவிர வண்ண ஆடைகளை அணிந்த காட்டுவாசிகள் போன்றோரும் இருப்பர். இம்மாதிரி வேடம் பூண்ட பாத்திரங்கள் அவர்களுடைய முக்கியப் பண்புகளைக் காட்டும் அலங்கார



படிப்பகம்

www.padippakam.com



...ண்டிகளில் தங்கள் வரலாற்றிலிருந்தும் ...தத் தொடர்பான கதைகளிலிருந்தும் முக்...ய காட்சிகளை நடித்துக் காட்டிய வண்ண...ருப்பர். போசன் பெரஹெரா, இந்திய ...மன்னன் அசோகன் காலத்தில் ஸ்ரீ லங்கா...வில் புத்தமதம் அறிமுகமான கட்டத்தை ...ளக்கும் அலங்கார ஊர்தியில், இலங்கை ...ன்னனும், மாமன்னன் அசோகனின் மதத் ...துவனும் சந்திக்கும் காட்சியை விளக்கு...றது.

இலங்கையிலுள்ள கண்டியில் புத்தரின் புனிதப் பல்லினை பெருமைப் படுத்துவதற்காக ஆண்டு தோறும் நடைபெறும் ''டலாடா பெரஹெரா'' என்ற தீப்பந்த ஊர்வலம்.

புத்த மதத்தின் முக்கியத் திருவிழாவா... வெசாக் நடைபெறும்போது ஸ்ரீலங்காவில் தெருத் திருப்பங்கள் மிகவும் முக்கியத்துவப் பெறுகின்றன. வெசாக் அல்லது வைசாக... என்று புத்தமத மொழியான பாலி மொழியி... அழைக்கப்படும் இவ்விழா, மே மாத... பௌர்ணமியன்று நடைபெறும். இது பு...தரின் பிறந்த நாள். ஞானம் பெற்று முக்...அடைந்த நாளாகும்.

வெசாக் கொண்டாட்டங்கள் முற்றிலு...



படிப்பகம்

www.padippakam.com



இலங்கையில் சாலை யோர மற்றும் திறந்த வெளி நாடகக்குழுவினர் நடத்தும் நாடகத்தில் ஒரு காட்சி,

மதச்சார்புடைய ஒளி விளக்கு அலங்காரங்களுக்கு இதில் அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. இது "தீபத் திருவிழா" எனலாம். வெசாக் திருவிழாக்காலத்தில் மிகவும் ஏழ்மையான இல்லத்தில்கூட சில விளக்குகளையேனும் ஏற்றி வைப்பது வழக்கம். பல வரிசைகளில் மின் விளக்குகள் அணைந்து அணைந்து எரிகின்றன. வண்ணங்கள் மாறுகின்றன. வட்டமான அலங்காரங்கள் தோன்றி கண்ணுக்கு விருந்தாக மக்களைக் கவர்கின்றன.

தோரணங்கள் வெறும் ஒளிக்காட்சி மட்டுமன்று இவை புத்தமதத்தின் ஜாதகக்கதைகளையும், புத்தரின் பிறப்பு பற்றிய நிகழ்ச்சிகளையும் விவரிக்கின்றன. ஒரு தோரணக் காட்சியில் கதையை விளக்கும் ஓவியங்கள் அல்லது கார்ட்டூன் படங்கள் போன்ற காட்சிகளைக் காணலாம். இப்பொழுதெல்லாம் ஒலியும் சேர்க்கப்பட்டு, முக்கிய பாத்திரங்களின் உரையாடல்களும், பின்னணி இசையும் வர்ணனையும் இடம் பெறுகின்றன. இது நகர்ப்புற நிகழ்ச்சி எனினும் தோரணம்-மக்கள் விரும்பும் கலைச் சாதனமாக, மத உணர்வுகளையும், மாபெரும் காட்சியை விரும்பும் மக்களின் சுவையையும் இணைக்கிறது.

வெசாக் திருவிழாவின்போது, வீதி நாடகங்களும் பாவனை நடிப்புக்களும் அனைவரும் கண்டு களிக்கும் வகையில் மிக உயர்ந்த மேடையில் நடித்துக்காட்டப்படுகின்றன. இதற்குக் கட்டணம் இல்லை. பார்வையாளரிடமிருந்து நன்கொடைகள் பெறப்படுகின்றன.

தோரணக் காட்சிகளுக்கும், வெசாக் நாடகங்களுக்கும், புத்தமதக்கதைகளும் ஜாதகர் கதைகளும் கதைக்கருவாக விளங்குகின்றன. கதைகள் நேரடியாகக் கூறப்படுகின்றன. பேச்சு வழக்கும், உயர்ந்த நடையும் கலந்த உரையாடல்களுடன் பாடல்களும் இடம் பெறுகின்றன. 'தோரணங்களில் நடைபெறுவதுபோலவே, ஒலி ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டு ஒலிபெருக்கிகள் மூலம் ஒலிபரப்பப்படுகிறது. அதற்கு ஏற்ப வெறும் பாவனையும், உதட்டசைவுகளுமே பெரும்பாலும் இடம்பெறுகின்றன.

## நவீன தெரு நாடகம்

பெரஹெராக்களும், வெசாக் தோரணங்களும் வெசாக் நாடகங்களும் - அடிப்படைக் கருத்துக்களில் ஒரு தொடர்பை உடையவை. ஆனால் ஸ்ரீலங்காவில் இன்று நிலவும் தெரு நாடகம், கடந்த காலத்திலிருந்து பிரிந்து இன்றைய சமுதாயம், அரசியல், பண்பாடு மதம் ஆகியவற்றைப் பற்றிய விமரிசனமாக விளங்குகிறது.

இன்றைய ஸ்ரீலங்காவின் நவீன தெருநாடகங்களுக்குத் தந்தை என காமினி கே. ஹத்தோட்டுவெகமா என்பவரைக் குறிப்பிடலாம். பல்கலைக் கழகத்தின் இலக்கிய ஆசிரியராக ஹத்தோட்டுவெகமா நாடகம்இன்றைய சமுதாயத்தைச் சுற்றியுள்ள பொம்மை, போலித்தனம் போன்ற திரையைக் கிழித் தெறியும் சாதனம் என்பதை உணர்ந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

ஹத்தோட்டுவெகமா, பதினேழு ஆண்டுகளுக்கு முன்னர்-நடைபாதைத் திறந்தவெளி நாடகக் குழுவைத் தொடங்கியபோது அது புதிய நுட்பங்களையும், நடிப்புப் பயிற்சியையும் தரும் குழுவாக இருந்தது. விரைவில், இதில் பங்குபெற்ற இளைஞர்கள் மிகுந்த வேட்கையுடன், சாதாரண நாடகங்களின் கட்டுப்பாடுகளால் பொறுமையிழந்து திறந்த வெளிகளில், மூடிய அரங்குகளின் தட்டுப்பாடுகளைத் தகர்த்து, புதிய நாடகங்களை அரங்கேற்றினர். நாடக அரங்குக்குச் செல்வதற்கு பணமோ, நேரமோ இல்லாத சாதாரண மக்களுக்காக இவர்கள் நாடகம் நடத்தினர்.

ஒரு தெரு நாடகத்தில் பல சிறு பகுதிகள் உள்ளன, ஒவ்வொன்றும் ஒருமணிநேரத்திற் குறைவாக நடைபெறும். அண்மையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியோ, இன்றைய நடப்புகளைப் பழைய கதையின் மூலம் விளக்கும் முயற்சியோ, புதிய தெரு நாடகத்தை உருவாக்கும். இதற்ரு உதாரணமாக ''மாமன்னனும் புதிய ஆடைகளும்'' என்ற புகழ்பெற்ற பழைய கதையை நவீனத் தொடர்புச் சாதனத்திற்காக மாற்றியமைத்தனத குறிப்பிடலாம். ஹத்தோட்டுவெகமாவே பெரும்பாலான நாடகக் கதைகளை எழுதியபோதும் பலரும் இதில் ஒத்துழைக்கிறார்கள். நாடகம் நடத்தப்படும்போது, நாடகங்கள் வளர்ந்து மாற்றம் பெறுகின்றன. சில சமயம் எதிர்பாராத மாற்றங்களை அடைகின்றன. உரையாடல்களில் அவ்வப்போது புதிதாகச் சேர்ப்பதற்காக வெற்றிடம் விட்டுவைப்பதும் உண்டு. முக்கிய நிகழ்ச்சிகளுக்காககுறைந்த காலத்திற்குக் நாடகங்களைத் தயாரிப்பது இவர்களுக்குக் கைவந்த கலை. இவற்றில் சுதந்திர உணர்வும் ஒற்றுமை உணர்வும் மேலோங்கி நிற்கும்.

இக்குழுவின் உறுப்பினர் எண்ணிக்கை மிகவும் அதிகமாகிவிட்டது. இளைஞர்கள் வருவதும் போவதுமாக இருக்கிறார்கள். எனினும் பலர் உறுதியாக இணையாக நிற்கிறார்கள். வீதி நாடகம் பணத்திற்காக நடத்தப்படுபவை அல்ல, பயணம், உணவு, போன்ற அடிப்படை தேவைகளுக்காக அவ்வப்போது பணம் வசூலிக்கப்படுவதுண்டு.

இக்குழுவின் சாதனைகளில் ஒன்றாக ஹத்தோட்டுவெகமா ஒரு முறை ஐ. நா. சபையின் உணவு வேளாண்மைக் கழகம் நடத்திய ஒரு கருத்தரங்கின்போது, இக்குழுவினர் அங்கே உள்ளே புகுந்து, அங்கேயுள்ள பிரதிநிதிகள் உயர்ரக உணவுகளை உண்டு களித்திருந்ததை நையாண்டி செய்து ஒரு சிறு நாடகத்தை நடத்தினர். உணவு வேளாண்மைக் கழகம் இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு, இந்நாடகத்தின் உரையாடல்களை தனது காலாண்டு இதழில் வெளியிட்டது. குடும்பநலதிட்ட மாநாட்டின் போது-இக்குழு ''மாத்திரை எதிர்ப்பு'' நாடகம் நடத்தி, சமுதாய முன்னேற்ற முயற்சிகளில் - மனித நேயம் புறக்கணிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டியது.

ஹத்தோட்டுவெகமாவின் நாடக முறைகள் சிறு அளவில் மட்டுமே நிலவுகிறது. எனினும் வளம் மிக்க நாடுகளில் உள்ள வசதிகள் இல்லாத ஒரு நாட்டில், நாடக அரங்கிற்குச் செல்லும் பொருள் வசதியற்ற மக்களுக்கு உகந்தாக உள்ளது. ஹத்தோட்டுவெகமாவும் அவர் குழுவினரும் ஒரு சாதனைப் பட்டியலே வைத்துள்ளார்கள். பதினேழு ஆண்டுகளாக அவர்கள் செயல்பட்டு வருவதே திறந்தவெளியில் உள்ள அபாயங்களை நோக்கும்போது ஒரு சாதனைதான். இக்குழுவுக்குப் போதுமான பொருள் வசதிகள் இல்லை. ஒத்திகை வசதிகள் இல்லை. அதற்கான இடமும் வாடகைக்கு எடுக்க முடியாது. எனினும் ஹத்தோட்டுவெகமா கூறுவதுபோல ''ஒரு புனிதக் கொள்கைக்காக'' இக்குழு செயல் படுகிறது-பணத்துக்காக அல்ல.

## நாடகத்தின் பரிசு

நாடகம் என்னும் பரிசை எடுத்துக் கொண்டு இக்குழுவினர் மக்களிடம் செல்கிறார்கள். இவர்களுடைய அரசியல் நோக்கமும், அவர்கள் செயல்படுத்துவதில் உள்ள இன்னல்களையும்இவர்கள் மறைப்பதில்லை. எனினும் இவர்களது படைப்புக்கள் சுவையுடையதாக உள்ளன. அறிவூட்டுவதாகவும் போலித்தனமற்றதாகவும் உள்ளன. நடிப்போருக்கும் மக்களுக்குமிடையே தோழமை உணர்வை உருவாக்கி, அவர்களிடையே உள்ள தூரத்தைக் குறைக்கின்றன. இதில் நடனம், பாட்டு. பாவனை, நேரடி உரையாடல் சுவையான தனிப்பேச்சு. போன்ற பல உள்ளன. நடப்பவரின் ஒவ்வொரு திறமையும் பயன்படுத்தப்படுகிறது. இதன் பாதிப்பு மிகவும் கூர்மையாக உள்ளது.

தற்போதுள்ள வழக்கமான நாடகங்களிலிருந்து முரண்பட்ட போதிலும் ஹத்தோட்டுவெகமாவும் அவருடைய குழுவினரும் தம் தெருவோரத் திறந்த வெளி நாடகங்களில் நவீன நாடக காலத்துக்கு முன்பிருந்த ஸ்ரீலங்காவின் நாடகப் பண்பாட்டுடன் தொடர்பை ஏற்படுத்தியுள்ளனர். நவீன நாடகத்துக்கு முந்தைய நாடகப் பண்பாடுகளில் பல இன்னமும் உள்ளன. இவை வணிக நோக்கால் பாழ்படாது நடைபெறும் சமுதாய முயற்சிகள். இவையும் பெரும்பாலும் நிகழும் தெருக்கூத்துக்களே தெருவோரத் திறந்த வெளிக் குழுவும் இவை போன்றதே-ஆனால் அதன் உலக நோக்கு முற்றிலும் மாறுபட்டது.

தெருவோர நாடகம் - மறைந்து விடுமா? ஹத்தோட்டுவெகமா-மறைந்து விடாது என்கிறார். இக்குழுவிற்கு ஸ்ரீலங்காவின் எல்லாப் பகுதிகளிலும் கிடைத்த ஆதரவைச் சுட்டிக் காட்டுகிறார். எனினும் இக்குழு இளைஞர்களைக் கவர்ந்து இளம் ரத்தங்களை உறுப்பினராகத் தொடர்ந்து வைப்பதில்தான் இதன் வெற்றி இருக்கிறது என்கிறார். தெருவோர நாடகம் எளிதான வாழ்க்கையன்று. ஆழ்ந்த சமுதாய ஈடுபாடும், நாடகத்திலும் இதற்குத் தேவை. நவீன உலகில் இவ்விரண்டையும் ஒன்றாகக் காண்பது அரிது.


தெருவோரத் திறந்த வெளி நாடகக் குழு ஸ்ரீலங்காவின் நாடக அரங்கில் விரும்பப்படும் ஒன்றாக இருக்கிறது வளர்ந்துவரும் இக்குழுவின் பாதிப்பையும் நோக்கங்களையும் தவிர, இக்குழு, வழிவழிவரும் வழக்கமான நாடகங்களின் எழிலுணர்வுக்கு- மாறுதலாக இது திகழ்கிறது.

தமிழில்: எஸ் சம்பத்குமார்



படிப்பகம்

www.padippakam.com



சிறுகதை

# நிலவிலே பேசுவோம்

என்.கே.ரகுநாதன்

1951ல் எழுதப்பட்ட சிறுகதை என்பது இதன் சிறப்பு. இன்று தமிழில் சிறுகதைகள் அடைந்துள்ள வடிவமாற்றங்களை இக்கதையுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்..

மாலையிலே மது ஒழிப்புக்கூட்டம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்த அந்த மாபெருங்கூட்டத்திலே ஆண்சிங்கம் போலத் தோன்றி, மதுவினால் ஏற்படும் தீமைகளையும் அது ஒழிக்கப்பட வேண்டிய அவசியத்தையும், அதற்கான வழிவகைகளையும் அள்ளி வீசி, இடையிடையே காந்தியத்தைப் பூசி, அழகு தமிழிலே அனல் பறக்கப் பேசிவிட்டுச் சற்று முன்பு தான் வந்திருந்தார் ஸ்ரீமான் சிவப்பிரகாசம் அவர்கள்.

அப்போது மணி எட்டு இருக்கும். அவருக்குப் பசி. அத்துடன் கூட்டத்திற்பேசிய களைப்பு வேறு.

சாப்பிட்டு முடிந்ததும், அறுசுவை உண்டியின் ருசியில் நாவைத் திளைக்கவிட்டபடியே உள்ளே இருந்த "ஓர்குலம்" பத்திரிகையைக் கையில் எடுத்துக் கொண்டு வெளியே வந்தார். விறாந்தையின் மூலையொன்றில் கிடந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு ஜகஜ் ஜோதியாகப் பிரகாசித்துக் கொண்டிருந்த மின் விளக்கின் ஒளியில் பத்திரிகையைப் புரட்டிப் படிக்கத் தொடங்கினார்.

ஒரு பந்திகூட வாசித்திருக்க மாட்டார். வெளியே வாசற் பக்கமாகச் சிலர் பேசுவது கேட்டது. பத்திரிகையில் படிந்திருந்த பார்வையைத் திருப்பி அங்கே நோக்கினார்.

யாரோ பத்துப் பன்னிரண்டு பேர்கள் நசித்துப் போன கூட்டம் அதாவது "உழைத்தாற்றான் உணவு" என்ற நிலையிலிருக்கும் உழைப்பாளி வர்க்கம்! அவர்களில் ஒருவன், தயங்கித் தயங்கி இவரண்டை வந்தான். மற்றவர்கள் அங்கேயே நின்றுவிட்டார்கள். சிவப்பிரகாசம் எழுந்து, இரண்டடி முன்னே நடந்து, வந்தவனை உற்றுப் பார்த்தார்.

"அடடே! நீயா கந்தா! என்ன சேதி" என்றார்.

"உங்களைக் காணவேண்டுமென்று வந்தோம். இந்த மதுவிலக்கு சம்பந்தமாக...." என்று தயக்கத்துடன் சொன்னான்.

"ஆகா! அதற்கென்ன, நல்லாய்ப் பேசலாமே! " என்று சொன்னார் சிவப்பிரகாசம்.

"இன்னும்சிலர் வந்திருக்கின்றார்கள். அப்படியானால் அவர்களையும் கூப்பிட்டு...." வார்த்தையை முடிக்காமல் வாசற்பக்கம் திரும்பி அங்கே உள்ளவர்களைக் கூப்பிட எத்தனித்தான் அவன்.

சிவப்பிரகாசம் ஒருகணம் திக்கு முக்காடினார். மனத்திலே ஒரு பரபரப்பு தடுமாற்றம்! தலையைச் சொறிந்து, நெற்றிப் புருவங்களை உயர்த்தி ஏதோ யோசனை செய்தவர், திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தார்.

"வேண்டாம் கந்தா, கூப்பிடாதே! இதெல்லாம் இரண்டாம் பேர் அறியக் கூடாதவிடயங்கள். மனைவி, மக்களென்றாலும் இந்தக் காலத்தில் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறதென்று யாருக்குத்தெரியும் அதோபார் வெளியே நல்லநிலவு! அத்துடன் பால் போன்ற மணல், அங்கே போய்ப் பேசிக் கொள்ளலாம் வா! " என்று அவன் பதிலை எதிர்பார்க்காமலே, கீழே இறங்கி நடந்தார். அவன் பின் தொடர்ந்தான்.

பின் வாசலில் நின்றவர்களையும் அழைத்துக் கொண்டு, சற்றுத்தூரம் போய் நல்ல இடத்தில் அமர்ந்து பேசினார்கள்.

*எப்போதும் இரண்டு விதமான தலைவர்கள் உண்டு. ஒருவர் தனது ஆட்டு மந்தையை இட்டுச்செல்வதில் குறியாக இருப்பார். மற்றவர் ஆட்டு ரோமத்தில் கண்ணாயிருப்பார்.*

*- ஃபுல்டன். ஜே.ஷீன்.*



படிப்பகம்

www.padippakam.com

யந்திரங்கள் தாழ்த்தப்பட்ட மக்கள். கள் சேர்ப்பது அவர்கள் தொழில். ஊர்முழுதும் "மது ஒழிக! " என்ற கூச்சல். இந்த நிலையிலே அவர்கள் கதி....?

மது ஒழிப்புக் கூட்டத்திலே சிவப்பிரகாசம் காரசாரமாகப் பேசியதை அவர்களும் கேட்டார்கள். எனவே அவரிடம் வந்து சேர்ந்தார்கள். தமது ஜீவப்பிரச் சனைக்கு ஆலோசனை கேட்பதற்கு.

"நாங்களும் மதுவிலக்குக்கு ஆதரவு தருகிறோம். மதுவினால் உலகத் திற்கே ஆபத்து என்பது நமக்குத் தெரியும். நமக்குக் கூட அது ஒரு மகிழ்ச்சியான தொழிலல்ல. ஊர் மக்களிடம் வசை கேட்கிறோம். 'எக்ஸைஸ்' உத்தியோகத்தர்களுக்கு சம்பளத்துக்கு மேலே 'கிம்பளம்' கொடுத்தும் ஒளித் தோடுகின்றோம்.... அது மட்டுமா? ஒவ்வொரு நொடிப் பொழுதும் உயிரைப் பணயம் வைத்துத் தான் வாழ வேண்டியிருக்கிறது. ஆகாயத்தை அளாவி நிற்கும் மரங்களில் இருக்கும் போது. நமது நிலைமையை எண்ணிப் பாருங்கள். மிகப் பயங்கரமான தொழில் தானே! என்றாலும்...?" என்று இழுத்தான் அங்கு வந்திருந்த ஒரு வாலிபன்.

"ஏன் இழுக்கிறாய்? சொல்லு தம்பி! " என்று வற்புறுத்தினார் சிவப்பிரகாசம்.

"நமக்கு வேறு தொழில் வேண்டுமே! "

சிவப்பிரகாசம் சிரித்தார். "இதென்ன பிரமாதம்? " இந்தப் பரந்த உலகில் தொழிலுக்கா பஞ்சம்? என்றார்.

"எத்தனையோ தொழில்கள் இருக்கின்றன தான் என்றாலும் நாம் செய்வது சாத்தியமா?"

"ஏன்?"

"ஒரு தேனீர்க் கடை வைத்தால் யாராவது நம்மிடம் வந்து தேனீர் குடிப்பார்களா? அல்லது ஒரு பலசரக்கு கடை வைத்தால் கூட நம்மிடம் வந்து சாமான் வாங்குவார்களென்பது என்ன நிச்சயம்? ஏன் ஒரு இரும்புக் கடையில் கூட நம்மவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள மாட்டார்களே இரும்புப் பொருட்களில் தீட்டு ஒட்டிக் கொள்ளுமென்று! அதிகம்வேண்டாம் என்னை உங்கள் வீட்டில் ஒரு கூலியாக வைத்துக் கொள்ளுங்கள் என்றால் சம்மதிப்பீர்களா? இந்த நிலைமையில்....." என்று வந்த வாலிபன் மிகவும் உணர்ச்சியுடன் பேசிவிட்டு அவர் முகத்தைப் பார்த்தான்.

"அப்படிச் சொல்லாதே தம்பி! அதெல்லாம் வேறு விஷயம். இவைதான் தொழில்களா? வேறு கைத்தொழில் செய்கிறது."

வாலிபன் பேச வாயெடுத்தான். அவனைத் தடை செய்துவிட்டு இதுவரை மௌனமாக இருந்த ஒரு நடுத்தர வயதினன் கோபத்துடன் கேட்டான்.

"ஆமாம்! அதெல்லாம் வேறு விடயங்கள். உங்களுக் கென்ன எத்தனையோ சொல்வீர்கள். இதோ பாருங்கள்! நான் இருக்கிறேன். எனக்கு இப்போது ஐம்பது வயதாகிறது. இந்தவயதில் நான் வேறு புதுத்தொழில் பழகித் தேர்ச்சியடைவதற்கும் காலன் வந்து என் கழுத்தில் கயிறு போடுவதற்கும் சரியாக இருக்கும். தொழில் பழகிற காலத்திலே நல்ல ஊதியம் கிடைக்குமா? அவ்வளவும் நானும் என் பெண்டாட்டி பிள்ளைகளும் பட்டினி கிடக்க வேண்டியதுதான். அப்படித்தானே உங்கள் திட்டம்? "

சிவப்பிரகாசம் ஆபத்தான கட்டத்தில் அகப்பட்டுக்கொண்டார்.

எனினும் சமாளித்துக் கொண்டு. "ஆத்திரப்படாதீர்கள்! நீங்கள் ஒருங்கே திரண்டு உங்கள் தேவைகளை அரசாங்கத்திடம் கேளுங்கள். நீங்கள் கள்ளுச்சேர்க்க வேண்டாம். கருப்பநீர் இறக் குங்கள். ஒரு சீனித்தொழிற் சாலை நிறுவித்தரும்படி உங்கள் தொழில் அமைச்சரைக் கேளுங்கள். கவனிக்காமல் விட்டு விடப் போகிறார்களா?" என்று நொண்டிச் சமாதானம் கூறினார்.

கூட்டத்திலிருந்து ஒரு புதிய எழுச்சிக்குரல் கேட்டது.

"அதொன்றும் வேண்டாம். மதுவினால் நன்மையோ!தீமையோ! நமது சாதி கொஞ்சம் முன்னேறி வருகிறது. அது உங்களுக்குப்பிடிக்க வில்லை. ஆனபடியால் தான் மதுவிலக்கு வேண்டும் என்கிறீர்கள் நீங்கள் மதுவை ஒழியுங்கள். காந்தி மகாத்மாவின் பெயரைச் சொல்லிக் கொண்டே எங்கள் வாழ்வைப் பறியுங்கள். நாங்கள் பசிகிடந்து சாகிறோம். தீண்டாமை ஒழிய வேண்டுமென்று மகாத்மா காந்தி சொன்னாரல்லவா? நாம் ஒழிந்து விட்டால் தீண்டாமையும் கொஞ்சம் ஒழிந்து விடும். உங்களுக்கு ஒருகல்லில் இரண்டு மாங்காய். அதே நேரத்தில் 'ஜின்னும்'. 'பிரண்டியும்' மருந்துக்கடைகளில் விலைப்படட்டும் மருந்து என்ற பெயரில்!"

"சைச்சை! இது தவறானவாதம்! அப்படி எண்ணவே கூடாது!"

"பின் எப்படி எண்ணுவது? காந்தியின் பெயரைச் சொல்லி மதுஒழிக்கக் கிளம்பிவிட்டீர்களே. முதலில் தீண்டாமையை ஒழிக்க வேண்டாமா?" என்றது அந்தக் குரல்.

சிவப்பிரகாசம் சிலையாய் விட்டார். இப்படிப் பேசுவார்கள் என்று அவர் எதிர்பார்க்கவேயில்லை.

வந்தவர்கள் எழுந்தார்கள்.

"நாங்கள் போய்வருகிறோம். சிந்தித்து நல்லதைச்செய்யுங்கள். மதுவிலக்கு அவசியம் வேண்டும்! அதேநேரத்தில் நாம் மகிழ்வுடன் வாழ வேண்டும். இந்த அடிப்படையிலே தொண்டாற்றுங்கள். உங்களுடன் நாமும் சேர்ந்து கொள்கிறோம்" என்று சொல்லி விட்டு நடந்தார்கள்,

*'வெளியே நல்ல நிலவு அங்கே போய்ப் பேசிக் கொள்ளலாம்!' என்று சிவப்பிரகாசம் சொன்னதன் அர்த்தத்தை புரிந்து கொள்ள அவர்களுக்கு அதிக நேரம் செல்லவில்லை.*

—1951

கவிதை

## நிர்ப்பந்த நிகழ்வு.

அவனுக்குத் தெரியும் என் பெயர்.
என் ஊரும், என் நிலையும் கூட.
சிலபோதுகளில்,
சிரித்துமிருக்கிறான்...
நேசமுடன் கதைத்துமிருக்கிறான்.
இன்று—
சைக்கிளை விட்டும் என்னை இறக்கி,
அடையாள அட்டை பார்த்து, முறைத்து,
பரிசோதித்து.......
.................
.................
அவன் காக்கி உடை
அணிந்திருக்கிறான்.

எம். கே. எம். ஷகீப்



படிப்பகம்

www.padippakam.com

# கவிதாஞ்சலி

**மரண உதயம்**

இரவுகள் –
இன்னும் விடியவில்லை.
கிழக்கு சூரியன்
உதித்து விட்டான்.
*
எங்கள் –
வாழ்க்கை சூரியன்
இன்னும் உதிக்கவில்லை.
*
நேற்றைய பொழுது,
இன்றைய விடிவு,
அனைத்தும்
வெடிச்சத்தங்களால்
வரவேற்கப்பட்டன.
*
ஆனால்,
எங்கள் வாழ்க்கைப்
பொழுதுகள் மட்டும்
மரண ஓலங்களால்
துதி பாடப்படுகின்றன.
நாளை,
இருப்போமா என்பதே
இன்றைய பொழுதுகளில்,
எமது கேள்வி.
*
சூரியன் மட்டும்
உதித்து விட்டான்.
எங்கள் தெருக்களின்,
மரணங்கள் போல்.
தினமும்,
சூரியன் மட்டும்
உதித்து விட்டான்.
*
இன்னும்,
விடிந்தும் விடியவில்லை
எங்கள் வாழ்க்கை.
* * * *

□ அ. உமாபதி.




**சகோதர இனத்திற்கு....**

கணக்குத் தீர்க்கப்படும்
உனக்கும் ஒரு நாளைக்கு.
'ரவுண்ட் அப்பில்'
நீ என்னைக்
காட்டிக் கொடுத்தாய்.
பூட்ஸ் கால்கள்,
என் தோலைத் துகிலுரித்தபின்
உயிர் இருந்தும்
பிணமாய் கிடந்திருக்கின்றேன்
நான்கு சுவர்களுக்குள்.

*

விடுதலை கிடைப்பினும்
வேதனை மறக்காது.

*

எங்கேயோ
வெடித்த குண்டுக்காய்
என்னை
விசாரிக்கவென
அழைத்துச் சென்றார்கள்.

*

இனி,
எல்லா நடப்புகளுக்கும்
என் வீட்டின் முன்
வேன் வந்து நிற்கும்.

*

சொல்லு,
நீ–
சொல்லத்தான் வேண்டும்
நீ சொல்லாத போதும்,
சொல்ல வைக்கிற நேரம்
எனக்கும் வரும்.

*

ஒரு–
யூதாஸாய் வந்து,
என் நெஞ்சின் மீது
துன்பச் சிலுவையைச்
சுமக்க வைத்த,
என் இன நண்பனே,
சொல்லு,

*

நான்,
இயங்குவதற்கு முன்னே.
* * * *

● பாலையூர் அநா

கவிதை

கவிதை



படிப்பகம்

www.padippakam.com

## எனது நாவல் அனுபவங்கள்

க. அருள்சுப்பிரமணியம்

1966ல் அரச சேவையில் சேர்ந்த ஆரம்ப நாட்களில் எழுதுவதற்கான தேவை உதயமாயிற்று. பெரிய சமூக நோக்கம் எதுவும் காரணமாக இருக்கவில்லை. தனது, இளமைக்கால மணவாழ்க்கையில்– எனது சகோதரி சந்தித்த சொல்லொணாத் துயரங்களை என்னால் ஜீரணிக்கமுடியவில்லை. உள்ளத்தில் கொப்பளித்த உணர்வுகள் எழுத்திற்கு வித்திட்டன. அப்போது, மட்டக்களப்பு கல்வித்திணைக்களத்தில் என்னோடு கடமைபார்த்த திரு. அன்புமணி அவர்கள் வெளியிட்ட 'மலர்' மாதாந்த சஞ்சிகையின் முதல் சிறுகதை 'தியாகங்கள் பாரமா' பிரசுரமாயிற்று.

மிக நுண்ணிய துயரங்கள் கூட , என்னை உணர்ச்சிவசப்பட வைத்துவிடும். சினிமாவில், சிறுகதைகளில் பார்க்கும், வாசிக்கும் சின்னஞ்சிறிய துன்பக் காட்சிகள் கூட என் மனதை இளக்கி, கண்களைக் குளமாக்கிவிடும். எழுத்து – என் உணர்வுகளைச் சொஸ்தப்படுத்தும் வடிகாலாக உதவத் தொடங்கிற்று.

வாசிப்பிலும், எழுத்திலும் தொடர்ந்து தீவிரமாக ஈடுபடுகையில் – பார்வை, சிந்தனை விசாலித்து–சமூகச் சீரழிவுகள்பற்றிய விசாரணைகள் மனதில் எழலாயிற்று. இந்த விசாரணைகள் தொடர்பாக –1966 தொடக்கம் 1970 இறுதிவரை 25 சிறுகதைகள் எழுதப்பட்டு வீரகேசரி, தினகரன், அஞ்சலி, மலர், ஆகிய சஞ்சிகைகளில் வெளிவந்தன.

காலம் காலமாக சமூகத்தில் நிலைகொண்டுவிட்ட பாரிய பிரச்சினைகளை–அதன் நீள, அகல, ஆழங்களை அப்படியே வெளிக்கொணர்வதற்கு சிறுகதைகள் போதுமானதாக இருக்கவில்லை. 1973ல்எனது முதலாவது நாவல் 'அவர்களுக்கு வயது வந்துவிட்டது' பிறந்தது. பிரபலமான பத்திரிகைகள் தோற்றுப்போக, 1974 இல் நானே புத்தகமாக வெளியிட்டேன். நம் நாட்டில் புரையோடிப்போன இனப்பிரச்சினையே இந்நெடுங்கதையின் ஜீவநாடி. அந்த அனுபவம் குறைந்த வயதில்–எதையெல்லாம் என் ஆழ்மனத்தில் வைத்துக் குமுறினேனோ, அதையெல்லாம் எழுத்தில்–மேற்பூச்சு எதுவுமில்லாமல் வெளிக்கொணர்ந்தேன். அந்த எழுத்தினூடாக–என் பலம், பலவீனம் எல்லாம் இயல்பாக வெளிப்பட்டு அதுவே அதன் வெற்றிக்கும் வித்திட்டது.

ஒருபக்கம்–1974ம் ஆண்டின்சிறந்த நாவலாக இலங்கை அரசின் சாகித்திய அக்கடமி பரிசினைப் பெற–மறுபக்கம் தமிழ்நாட்டின் இலக்கியப்பத்திரிகை 'கணையாழி', "தமிழ் நாவலுக்கு வயது வந்துவிட்டது" என விமர்சனம் தீட்டியது. இலங்கையில் இதுவரை வெளிவந்த 7 சிறந்த நாவல்களில் ஒன்று எனவும் பாராட்டப்பெற்றது. இன்றுவரை வெளிவந்துகொண்டிருக்கும் நாவல் விமர்சனங்களில் இந்நாவல் இடம்பெற்றுக்கொண்டேயிருக்கிறது.

2வது நாவல், 'நான் கெட மாட்டேன்'–பெரிய சமுதாயப்பிரச்சினையை எடுத்தாளாமல் மெல்லிய உணர்வுகளின் அடித்தளமாய் வைத்து எழுதப்பட்டுவீரகேசரி பிரசுரமாய் 1975ல் வெளிவந்தது.

1977ல் மூன்றாவது நாவல் 'அக்கரைகள் பச்சையில்லை' வீரகேசரி பிரசுரமாக வந்தது. 1981ல் ஆனந்தவிகடன் பொன்விழாப் போட்டிகளுக்கு என்னால் எழுத்துப்பிரதியாக அனுப்பிவைக்கப்பட்ட இந்நாவல்–சுமார் 250நாவல்களோடு போட்டியிட்டு–சிறந்த நாவலாகத் தெரியப்பட்டு ரூபா 20,000/– பரிசைப் பெற்றது.



படிப்பகம்

www.padippakam.com

ஆயினும், ஏற்கனவே இலங்கையில் புத்தகமாகப் பிரசுரிக்கப்பட்ட காரணத்தினால் பரிசு மீளப் பெறப்பட்டது.

இங்கே-ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்த வேண்டியது என் ஆத்மார்த்த கடமை. போட்டி விதிமுறைகளைப் பார்த்துவிட்டு நாவலை அனுப்பச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. போட்டி பற்றிக் கேள்விப்பட்டவுடன் எழுத்துப்பிரதியாகக் கைவசமிருந்த இந் நாவலை அனுப்பிவைத்தேன். எதிர்பாராதவிதமாக, உலகளாவிய இப்போட்டியில் வெற்றியடைந்தேன் என அறிவிக்கப்பட்டபோது-வாசிகசாலையில் பழைய விகடனைத் தேடிப் பிடித்து, போட்டி விதிமுறைகளை வாசித்தேன். ஏற்கனவே புத்தகமாக வெளிவந்திருக்கக்கூடாது என்ற விதி அதிலிருந்தது.

உலகளாவிய தமிழ் நாவல் போட்டியில் எனக்கும், இலங்கைத் தமிழ் நாவல்களுக்கும் கிடைத்த இந்த கௌரவத்தைக் சூற்றுயிராக்க என் மனம் இசையவில்லை. எழுத்தாளன் என்ற உணர்வே மேம்பட்டு நின்றதால் ரூபா 20,000/- பணத்தை ஒரு பொருட்டாக நான் நினைத்ததேயில்லை. உண்மை வெளிவரும்போது வரட்டும்-இப்போது பரிசினை ஏற்றுக்கொள்வோம் எனும் உணர்வோடு பரிசினைப் பெற்றுக்கொண்டேன்.

கலைஞர் மு. கருணாநிதியிடம் பரிசினைப் பெற்றுத் திரும்பிய எனக்கு இங்கு பல பாராட்டுவிழாக்கள் நடந்தபோதும்-இது ஒரு பறிபோகப்போகிற பரிசு என்ற உண்மை தெரிந்தே இருந்தது.

அதுபோலவே, நடந்தும் விட்டது. வாய்மை, சத்தியம் என்ற உயரிய தர்மத்தை ஆழமாக எண்ணிப் பார்க்கும் வயதோ, அனுபவமோ அப்போது எனக்கில்லை. எழுத்தாளனுக்குக் கிடைக்கும் இப்படியொரு கௌரவத்தினை விட்டுக் கொடுக்கும் மனபக்குவம் இருக்கவில்லை. என்பதே உண்மை.

இப்போது, அனுபவங்கள் கூடிய நிலையில்- பார்வை, சிந்தனை, செயல் ஆகியவை சிறிது விரிவடைந்த நிலையில் இந்த விடயத்தை என்மனம் மீண்டும் அசைபோடுகிறது. வாய்மை பெரிது, சத்தியம் பெரிது என்பது தெளிவாகின்றது. எழுத்தாளன் என்ற வகையில் எவ்வளவோ காரணங்கள், சமாதானங்கள் என்னால் கூறப்பட்டபோதும் இச்செயல் சத்தியத்திற்கு எதிரானது என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

அதன்பின், விகடன் ஆசிரியருக்கு விளக்கம் ஒன்றினை அனுப்பிவைத்தேன். அதனை ஏற்றுக்கொண்டதுடன் மட்டுமல்லாமல், என் வேண்டுகோளுக்கிணங்க- 'சூரசம்உஹாரம்' என்ற எனது 4வது நாவலை விகடனில் 23 வாரங்கள் தொடராக 1982ல் வெளியிட்டுத் தன் பெருந்தன்மையை நிலைநாட்டினார்.

1983ல் நாட்டு நிலைமை சீர்கெட்டது. படைப்புக்களைச் சுதந்திரமாக வெளியிட முடியாத நிலை. அதனால், பெரிய தேக்கம். 1989ல், மீண்டும் எழுதத் தொடங்கினேன். 'நான் நீதியின் பக்கம்' நாவலும் 10 சிறுகதைகளும் கையிலுள்ளது. காலம் கனியும்வரை காத்திருக்கிறேன்.

இலங்கைத்தமிழ் மக்களின் போராட்ட வரலாறும், தியாகங்களும், சுதந்திர உணர்வுகளும் பற்றிய விரிவான பெரிய நாவல் ஒன்றை எழுதவேண்டும் என்பதே என் இன்றைய விருப்பம்.

கைகூடலாம்-கூடாமலும் போகலாம்,
எல்லாம் 'அவன்' விட்ட வழி.

ஆனால் ஒன்று;

எழுத்தாளனுக்கு சத்தியமும் சமநிலையும்
பக்கஞ்சாராமையும் மிக மிக அவசியம்.
அப்போதுதான் அவனால் நெடுங்காலம்
நின்று நிலைக்கக் கூடிய உயரிய
படைப்புக்களை வழங்கமுடியும்.
எமது மக்களின் போராட்ட வரலாற்றை
எழுதப் புகுமுன் - இவ்வுயரிய குணங்கள்
என்னிடத்தில் இருக்கவேண்டுமென விரும்புகிறேன்.
முயற்சிகளும் செய்கிறேன்.
இனி எல்லாம் இறைவன் செயல்.



படிப்பகம்

www.padippakam.com

## தேடல்கள் ...

... மைதிலி

"பாலு உன்னுடைய நுண்ணுணர்வுகளுக்கும், இந்த மீடியத்தின் மீது நீ கொண்டிருக்கும் காதலுக்கும் உன்னுள் இருக்கும் படைப்புத்தாகத்திற்கும் நீ ஒரு இயக்குனராக மாறுவதுதான் இயல்பானது. விரைவில் நீ ஒரு படத்தை இயக்குவாய்..."

"MARK MY WORDS"

இது வங்கத் திரையுலகின் மாமேதையும் புகழ்பூத்த உலக இயக்குனர்களின் வரிசையில் முக்கியமானவருமான அமரர் சத்தியஜித்ராய் இயக்குநர் பாலுமகேந்திராவுக்கு கூறிய வார்த்தைகள். ராய் அவர்களை மானசீகக் குருவாக ஏற்றுக்கொண்டு அவரது 'பதேர் பாஞ்சாலி' மூலம் தாக்கப்பட்டு, மசாலாவின் பிடிக்குள் சிக்குப்பட்டிருக்கும் இந்திய தமிழ் சினிமா உலகை சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் முயற்சியில் சிலபரிசோதனைகளை செய்தவரும் மட்டக்களப்பைச் சேர்ந்த முதல்தர தமிழ்க் காமேராகலைஞன் பாலுமகேந்திரா, தமிழில் சில வித்தியாசமான படைப்புக்கள் மூலமும், பிறமொழிப் படங்கள் மூலமும் கவிதை சொல்லும் அந்தக் கலைஞனை எமது நாடு இன்னமும் சரியாக அறிந்து வைத்திருக்காதது கவலைக்குரியதே. இந்திய தேசிய ரீதியில் இரு விருதுகளையும், கர்நாடக, ஆந்திர, கேரள அரசுகளின் விருதுகளை நெறியாள்கைக்காகவும், சிறந்த ஒளிப்பதிவுக்காகவும் பெற்றுள்ள இக்கலைஞனை FILM FARE மும்முறை சிறந்த இயக்குநராக தெரிவுசெய்துள்ளதும் சர்வதேச குழந்தைகள் படவிழாவின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ளதும் இவருக்கு மட்டுமல்ல எமக்கும் பெருமையாகும்.

ஆரம்ப காலங்களில் மூடுபனி, அழியாத கோலங்கள், மூன்றாம் பிறை, தந்தபோதே எமது தமிழ் ரசிகர்கள் அவரிடம் மசாலாவையே எதிர்பார்த்தார்கள். அதற்குப் பதிலாக இந்திய ரசிகர்களை திருப்திப்படுத்துவதற்காகவும், அவர்களை நக்கல் அடிப்பதற்காகவுமே 'நீங்கள் கேட்டவை', 'ரெட்டை வால் குருவி' போன்ற படங்களைத் தர முனைந்த பாலுமகேந்திராவின் பெயர் சொல்லும் 'வீடு', 'சந்தியாராகம்' போன்ற விருதுகள் பெற்ற படங்களை இவர்கள் அறிந்திருப்பார்களா? என்பதே கேள்விக்குரியதாக இருக்கையில் இவரது பிறமொழிப் படங்களான 'ஜூலங்கள்', 'யாத்ரா' 'சத்மா', 'நிரீக்ஷணர்', 'நெல்லு', 'கோகிலா', 'பசி', 'பிறவி' போன்றவற்றை எப்போது அறியப்போகிறோம்?.

மக்களின் ரசனை சம்பந்தமாக வியாபார உலகின் சினிமா இயக்குனர்களுடன் முரண்பட்டு நிற்கும் பாலுமகேந்திரா ஒரு பத்திரிகைப் பேட்டியில் கூறியவற்றை அப்படியே தருகின்றேன்.

"திரைப்படத்தை ஒரு முழுமையான வடிவமாகப் பார்க்க வேண்டும். காட்சி, நடிப்பு, உரையாடல், பாட்டு, இசை என்று தனித்தனியாகப் பிரித்து-பிய்த்துப் பார்ப்பதில் எனக்கு உடன்பாடில்லை. விமர்சனம் செய்யும்போது வேண்டுமானால் மேலோட்டமாக இப்படி ஒவ்வொரு அம்சத்தையும் பிரித்தெடுத்து அலசலாம். படம்பார்க்கும்



படிப்பகம்

www.padippakam.com

போது அதை ஒரு முழுமையான படைப்பாகவே பார்க்க வேண்டும். மக்கள் ரசனை என்பது மக்கள் பிறக்கும்போதே அவர்கள் கொண்டுவந்த விசயமல்ல. மாறாக நம்மால் அவர்கள் மீது வலுக்கட்டாயமாக திணிக்கப்பட்ட விசயம். நமது சுயநல நோக்கங்கள் கருதி பிடிவாதமாக, பிரக்ஞைபூர்வமாக ஒரு மட்டமான ரசனையை அவர்கள் மத்தியில் (நமது மட்டமான படைப்புகளால்) நாம் உருவாக்கிவிட்டு அவர்கள் இதைத்தான் விரும்புகிறார்கள் என்று அவர்கள்மீது பழியைச் சுமத்துவது வடிகட்டின அடாவடித்தனம்... சுத்த ஐம்பக்.

போதைப் பொருட்களுக்கு அடிமையாக்குவதைப் போல மக்களை நமது மட்டமான படங்களுக்கு அடிமைகளாக்கி வைத்திருக்கிறோம். அது எங்களுக்கு லாபகரமாக உள்ளது. சினிமா மட்டுமல்ல, மக்களைச் சென்றடையும் நாடகம் பத்திரிகைகள், அரசியல் எல்லாவற்றையும் கொண்டுதான் மக்களின் ரசனையை நாம் காயடித்து வைத்திருக்கிறோம். எல்லோரும்தான் குற்றவாளிகள். தனது மேம்பட்ட ரசனையின் அளவுக்கு மக்கள் ரசனையை உயர்த்திவிடவேண்டும் என்ற அடிப்படையில் செயல்படுபவன்தான் ஒரு நேர்மையான படைப்பாளி. மக்கள் ரசனையை வளர்த்துவிட்டால் தனது பிழைப்புக்கு ஆபத்து வந்துவிடும் என்றுதான் நாடகக்காரர்கள், சினிமாக்காரர்கள் எல்லோரும் நினைக்கிறார்கள். இது வடிகட்டின சுயநலம்.

நிலைமை இப்படியிருக்க, மக்களுக்கு ரசனை சரியில்லை. எனவேதான் அந்த மட்டத்துக்கு நாங்கள் கீழே இறங்கிவரவேண்டி இருக்கிறது. ஒன்று முதலைக்கண்ணீர் வடிப்பது திருட்டுத்தனம். தீர்மான திருட்டுத்தனம். மக்களின் ரசனையை மட்டமாக வைத்திருப்பது நாம்தான் ....... மக்களல்ல.

நாமெல்லாம் சேர்ந்து ஒரு இயக்கமாக - ஆரோக்கியமான பொழுதுபோக்குப் படங்களை, கலையம்சம் கொண்ட பொழுதுபோக்குப் படங்களை, சமூக உணர்வு கொண்ட பொழுதுபோக்குப் படங்களை அவர்களுக்குத் தொடர்ந்து கொடுத்துப் பார்ப்போமேயானால் அவர்களது ரசனை உயரும். நிச்சயம் உயரும். இது நாமெல்லாம் சேர்ந்து செய்யவேண்டிய விஷயம். ஒருவர் இரண்டுபேர் மட்டும் செய்தால் போதாது." ●●●



<u>உணர்த்து</u>......

கூறு! கூறு!
இன்னும் உரத்து
தேசம் வரித்துக் கொண்டதான
சோகம் பற்றி......
*
அங்கலாய்ப்புக்கள் கொண்ட
பூதங்கள்,
இன்னும் ஆட்டிப் படைக்கின்றதாய்
கூறு !
*
செத்த பின்னும் கூட
கொள்ளிக்குச் சுதந்திரமில்லாத
பிடிப்பைப் பற்றி.....
*
என்றோ போகும் உயிரை
இன்று போனால்தான்
என்ன என்று.....
உன் குரல் வளை
கிழியும் வரைக்கும்
எங்கள் --
ஜனநாயகத்தின் சேதிகளை
உரத்து......இன்னும் உரத்து....
உலகிற்குக் கூறு!
* * *

-அக்குறணை இளைய
அப்துல்லாஹ். -



படிப்பகம்

"இருந்த போதும்
எழுந்து நட
நடக்க – நடக்க
பாதைகள் புதிதாய்
தோன்றும்"

# இராஜலட்சுமி மில்

151, மத்திய வீதி,
திருக்கோணமலை.

விற்பனையாகிக் கொண்டிருக்கிறது
கவிஞர். வி மைக்கல் கொலினின்
**என் பிரிய ராஜகுமாரிக்கு**
(புதுக்கவிதைத் தொகுதி)

விலை: ரூபா. 50-00 ● தேவையானோர் உடன் தொடர்பு கொள்க



*With Best Compliments From*

# STUDENT SHOPPING MART

STATIONERY & FANCY GOODS

ASK FOR

**PARADISE VIDEOS**

FOR QUALITY

VIDEO FILMING WITH MIXING

312/A, COURT ROAD
TRINCOMALEE.

www.padippakam.com

Best With Wishes

**Studio Vinns**

ARTISTS & PHOTOGRAPHERS
Photo Finishers
With
Style Smile
at

**VINNS**

**North Coast Raod, Trincomalee**

WE UNDER TAKE:
- Framing
- Photocopying
- Colour Processing

*With Best Compliments From*

*For all your Requirements in*

**Gold Jewellers**

**ANANTHA JEWELLERS**

183, Ahambaram Road, Trincomalee.

படிப்பகம்

www.padippakam.com

ஈழத்து இலக்கியப் பரப்பு நோக்கி
திருக்கோணமலையின் கலை இலக்கிய
முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும்
தாகம் கலை இலக்கிய புரட்சிகர
இதழிற்கு எமது பூபான வாழ்த்துக்கள்

BUILDERS

&

GENERAL CONTRACTORS

**R. RAVICHANDRAMOHAN COMPANY (PVT) LTD.**

71, Thirugnanasampanthar Street,
Trincomalee.

☎

22046

படிப்பகம்

www.padippakam.com

திருக்கோணமலையின் கலை இலக்கிய முயற்சிகளுக்கு
பூபாளம் பாடும் வகையில், கடந்த 9 வருடகாலமாக
வெளிவந்து கொண்டிருக்கும் தாகம்
இலக்கிய இதழிற்கு எமது
பன்னீர் வாழ்த்துக்கள்

*For all your Requirements in*

**Gold Jewellers**



**ARUNA Jewellery**

**18-A, 3rd Cross Street,**
**Trincomalee.**

ஓடர்கள் குறித்த தவணைக்குள் செய்து கொடுக்கப்படும்.

**Thaaham**

Edited and Published by: W. MICHAEL COLLIN
156, Green Road; Trincomalee.

Printed at : Wisdom - Trinco
Layout : Thaaham Fine - Arts Academy
Price : Rs - 20-00

படிப்பகம்